ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு. சே.கணேஷ்,பி.இ.,

ந.க. 18447/2023/அ5 நாள்:29.12.2023

பொருள்: நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV-க்குட்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடம் (தேர்வு நாள்:24.07.2022) - தேர்வு செய்யப்பட்டவர்கள் - ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் வழங்கப்பட்டது - பணியில் சேர்ந்த இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1810/ PSD-D1 / 2023 நாள் : 16.08.2023.
2. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள் ந.க.18447/2023/அ5, நாள்.15.09.2023.
3. முதன்மைக் கல்வி அலுவலர், நாமக்கல் கடிதம் ந.க.9626/ஆ2/2023 நாள்:15.11.2023.
4. தொடர்புடைய ஆவணங்கள்.

---------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV-க்குட்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு (தேர்வு நாள்:24.07.2022) தேர்வு செய்யப்பட்டவர்கள், பார்வை 01-ல் காணும் கடிதத்தின்படி ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டியலில் காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் பார்வை 02-ல் காணும் செயல்முறை ஆணையின்படி ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதிகளின் விதி 23(a)(i)-ன்கீழ் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்ட தேதியில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 01 | பி. பாரதி | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |
| 02 | ஆர். சதீஸ் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பவானி. | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |
| 03 | பி. இளம்பாரதி | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம் (ச.பா.தி), நம்பியூர். | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |
| 04 | எஸ். கார்த்திகேயன் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு. | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |

வட்டாட்சியர் அலுவலகம் ★ பவானி. 05 JAN 2024

Scanned with OKEN Scanner

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | எஸ். நந்தினி | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அந்தியூர். | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |
| 06 | ஐ. முஸ்குரா பேகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், சத்தியமங்கலம். | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |
| 07 | எஸ். சங்கீதா | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், மொடக்குறிச்சி. | 29.09.2023 மு.ப. | 29.09.2023 மு.ப. |

மேற்படி பணிவரன்முறை ஆணை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

**"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group –IV).**

மேற்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவுசெய்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், மேற்காணுமாறு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- சே.கணேஷ்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
ஈரோடு.

//உண்மை நகல்//ஆணைப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:
**மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் - உரிய வழிமுறையாக.**

நகல்: வருவாய் கோட்ட அலுவலர், ஈரோடு / கோபிசெட்டிபாளையம்.
நகல்: வருவாய் வட்டாட்சியர், ஈரோடு / மொடக்குறிச்சி / அந்தியூர் / பவானி / சத்தியமங்கலம்.
நகல் : வட்டாட்சியர் (ச.பா.தி), நம்பியூர்.
நகல் : கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை - 5 - அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : "அ5" முக்கிய ஆணை தொகுப்பிற்கு, உபரி - 2.

Copy Received
05/01/2024

Scanned with OKEN Scanner